# உள்ளடக்கம்.


01. அறிமுகம்.
02. தொலைநோக்கு / **Vision**
03. பணிநோக்கு / **Mission**
04. நோக்கம்:
05. இலக்குக் குழுக்கள் :
06. பணியாற்றும் பிரதேசங்கள்
07. நிறுவன /முகாமைத்தவக் கட்டமைப்பு
08. பணியாளர்கள் விபரம்.
09. அங்கத்தவர்கள் விபரம்.

10. திட்டங்கள்

**10.1 பொருளாதார அபிவிருத்தி திட்டம்**
10.1.1 சேமிப்பு, கடன் திட்டம்
10.1.2 மரணாதாரத் திட்டம்
10.1.3 வாழ்வாதாரத் திட்டம்
10.1.4 தொழில் பயிற்சி வழங்கல்.

**10.2 சமூக அபிவிருத்தி திட்டம்**
10.2.1 கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள்
10.2.2 சிறுவர் அபிவிருத்தி செயற்பாடுகள்
10.2.3 பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள்
10.2.4 விழிப்புணர்வு நடவடிக்கைகள்.

**10.3.சுற்றாடல் / சூழல் அபிவிருத்தி திட்டம்**
10.3.1. குடிநீரும் சுகாதாரமும்.
10.3.2. இயற்கைமுறை விவசாயம்
10.3.3. அனர்த்த அபாயத்தணிப்பு.
- அனகியடுப்பு வழங்கல்.
- மரம் நடல்.

11. நிதி வழங்கும் நிறுவனங்கள்.
12. அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.
13. பணியாளர்கள் பெற்ற பயிற்சிகள்.
14. நிகழ்வுகள்.

## 01.அறிமுகம்.

1990ம் ஆண்டிலும் அதன் பின்னரும் ஏற்பட்ட யுத்தத்தினாலும், வன்செயல் களினாலும், அரசின் இனஒதுக் கலினாலும் பௌதீக ரீதியாகவும், உளவியல்ரீதியாகவும் பாதிக்கப்பட்ட, பின்தங்கியிருந்த மக்களின் வாழ்வை மேம்படுத்தி அவர்கள் வாழ்விற்கு புத்தொளியூட்டப்பட வேண்டுமென்ற நோக்கில் **“எல்லோருக்கும் நல்வாழ்வு”** என்னும் தொனிப்பொருளை அடிநாதமாகக் கொண்டு இவ்வமைப்பு உதயமானது.




அம்பாறை மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை கருத்தில் கொண்டு இப்பகுதி மக்களுக்கு சேவையாற்றும் ஒரு அரசசார்பற்ற அமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் **திரு.சன்முகம் செந்துராசா** அவர்கள் மாவட்டத்தின் பல்வேறு பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள முக்கிய பிரமுகர்களை அழைத்து இது பற்றிய கலந்துரையாடல்களை நடாத்தி வந்தார். இதன் விளைவாக **1995ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1ம் திகதி** அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.




இவ் அமைப்பானது அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களை மையமாகக் கொண்டு பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 6 பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள 57 கிராமக் கிளைகளில் தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின மக்களினையும் உள்ளிணைத்து பெண்களை பயன்பெறுனர்களாகக் கொண்ட 688 கிராமக் குழுக்கள் அமைக்கப்பட்டு, பெண்கள் தலைமையில் இக்குழுக்கள் செயற்பட்டுக் கொண்டு வருகின்றது.

இக் குழுக்களின் மூலம் அக்கிராம மக்களின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதோடு பிரதேச ரீதியாக பெண்கள் தலைமைத்துவத்தினை வளர்க்கும் நோக்கில் அதிகாரப் பரவலாக்கம் என்ற ரீதியிலே அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் அலுவலகங்களை அமைத்து அவர்களுக்கு அதிகாரங்களை வழங்கியது மட்டுமல்லாமல் அதற்கான பயிற்சிகளையும் வழங்கியதன் விளைவாக பிரதேச, கிளை நிர்வாகத்தினை சிறந்த முறையில் நடாத்துவதிலும், தீர்மானங்களை மேற் கொள்வதிலும்,

ஆலோசனைகளை வழங்குவதிலும், சிக்கனமான நிதி நடவடிக்கைகளிலும், இவர்கள் சிறந்தவர்களாக மிளிர்கின்றனர். தற்போது எமது பணியானது 7797 அங்கத்தவர்களையும், 138 பணியாளர்களையும் இணைத்த வகையில் **ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா** அவர்களின் வழிகாட்டலின் கீழ் தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றது.

**எமது அமைப்பின் மூலமாக என்ன சாதித்திருக்கின்றோம். எதைச்சாதிக்க முயற்சித்தோம் என்பது பற்றி உள்வரும் பக்கங்களிலே கண்டு கொள்ளலாம்.**

## 02. தொலைநோக்கு / Vision

அம்பாறை மாவட்டத்தில் உள்ள நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளை அடையும் பொருட்டு சேவைகளையும் சமமான வாய்ப்புக்களையும் வழங்கும் மீயுயர் நிறுவனம்.

**"Model of excellence, providing equal opportunity service for meeting basic needs of deprived people in Ampara district."**

## 03. பணிநோக்கு / Mission

விளைவுகள் அடிப்படையிலான வினைத்திறன் உள்ள சேவைகளை நலிவுற்ற மக்களுக்கு வழங்கும் முற்போக்கு எண்ணமுள்ள உதவுவோரையும், ஆக்கத்திறனும் மற்றவரை ஊக்குவிக்கும் திறனுள்ள பணியாளரையும் கொண்ட அமைப்பு.

**"People focused Organization enabling deprived Communities to enhance their quality of life through the provision of productive and results oriented services in partnership with progressive actors and a team of creative and inspiring activists "**

## 04. நோக்கம் :

1. நலிவுற்ற மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தலும், வறுமையை தணித்தலும்.
2. பாதிக்கப்பட்ட பெண் தலைமைதாங்கும் குடும்பங்களினது வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தல்.
3. ஜனநாயக சமூகத்தில் மக்களின் பங்குபற்றுதலை விருத்தி செய்வதும், அதனை மேம்படுத்தலும்.
4. அபிவிருத்தி நடவடிக்கைகள் மூலம் மக்களுக்கு தன்னிறைவான வாழ்க்கையினைப் பெறுவதற்கு வழிகாட்டல்.
5. உள்ளூர் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தவதற்கு வழிகாட்டல்.
6. வறிய மாணவர்களுக்கான கல்வி வசதிகளையும், வாய்ப்புக்களையும் வழங்குதல்.
7. சமூக நல்லுறவு மற்றும் இனங்களிடையிலான சமாதான நல்லுறவை ஏற்படுத்தல்.

## 05.இலக்குக் குழுக்கள் :

01. **விதவைகள்**
    - யுத்தத்தினால் விதவையானவர்கள்
    - இயற்கைக் காரணிகளால் கணவனை இழந்தவர்கள்
    - நிரந்தரமாக / சட்ட பூர்வமாக கணவனைப் பிரிந்து வாழ்பவர்கள்.

02. **பாதிப்புற்ற சிறுவர்கள்**
    - போரினால் பாதிப்புற்றவர்கள்
    - வறுமையினால் கல்வி கற்க முடியாதவர்கள்
    - ஆதரவற்ற சிறுவர்கள்.·.
    - பெற்றோரை இழந்த சிறுவர்கள்
    - பாதுகாப்பற்ற, பாதிக்கப்பட்ட சமூகத்தில் வாழும் சிறுவர்கள்
    - பெற்றோருடன் வாழும் வறிய குடும்பத்துச் சிறுவர்கள்
    - போதை, மது பாவிக்கும், வெளிநாடு சென்ற பெற்றோரின் பிள்ளைகள்

03. **அங்கவீனர்கள்**
    - போரினால் அவயவங்களை இழந்தவர்கள்
    - இயற்கை ஊனம்
    - சுகப்படுத்தக்கூடிய ஊனம்
    - பல்வேறுபட்ட நோயாளிகள்

04. **ஆதரவற்றவர்கள்**
    - ஆதரவற்ற முதியவர்கள்
    - உதவிகள் எதுவுமற்ற தனித்த குடும்பங்கள்
    - பராமரிப்பற்ற முதியவர்கள்

05. **மது, போதை பழக்கங்களிற்கு அடிமையானவர்கள்**
    - வறிய குடும்பத் தலைவர்கள்
    - பெண்கள்
    - இளைஞர்கள்
    - சிறுவர்கள்

06. **மிக வறிய குடும்பங்கள்**
    (அடிப்படை வசதியற்ற, நிரந்தர தொழிலற்ற, மிகக் குறைந்த மாத வருமானம், அதிகளவு குடும்ப அங்கத்தவர்கள், போசாக்கற்ற உணவு உட்கொள்ளும் மக்கள்)

07. **வீதிச் சிறார்கள்**
    - துணையற்றவர்கள்
    - குடும்பத்துடன் வாழ்பவர்கள்

08. **சிறை மீண்ட இளைஞர்கள்**
09. **சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள்**
10. **வேலைவாய்ப்பு வசதிகளற்ற இளைஞர், யுவதிகள்**
11. **சிறுதொழில் முதலீட்டாளர்கள் - சுய தொழிலில் ஈடுபடுவோர்.**
12. **கல்வி கற்றுக் கொண்டிருக்கும் வறிய மாணவர்கள்**

## 06. பணியாற்றும் பிரதேசங்கள்.

**பிரதேசம் - கிராமங்களின் எண்ணிக்கை.**

| | | |
|---|---|---|
| 01. பொத்துவில் | - | 9 |
| 02. திருக்கோவில் | - | 17 |
| 03. நாவிதன்வெளி | - | 11 |
| 04. கல்முனை | - | 9 |
| 05. சம்மாந்துறை | - | 6 |
| 06. காரைதீவு | - | 5 |

## 07. நிறுவன - முகாமைத்துவக் கட்டமைப்பு.
## Organizational Structure




கட்டமைப்பில் பிழை

## 08. பணியாளர்கள் விபரம். (December-09)

| இல | பணியாளர் | ஆண் | பெண் | மொத்தம். |
|---|---|---|---|---|
| 1 | மாவட்டமட்டம் | 32 | 13 | 45 |
| 2 | பிரதேச மட்டம் | 12 | 11 | 23 |
| 3 | கிராம மட்டம் | 0 | 17 | 17 |
| 4 | பாலர் பாடசாலை ஆசிரியர்கள் | 0 | 53 | 53 |
| | **மொத்தம்.** | **44** | **94** | **138** |

## 09. அங்கத்தவர்கள் விபரம்.

- பொத்துவில் - 1045
- திருக்கோவில் - 2190
- காரைதீவு - 777
- கல்முனை - 1433
- சம்மாந்துறை - 949
- நாவிதன்வெளி - 1403

**மொத்தம் 7797**

**(இணைப்பு – 01)**

## 10. திட்டங்கள்.

10.1. **பொருளாதார அபிவிருத்தி திட்டம்** :- மக்கள் சுயதொழிலில் ஈடுபடுவதன் மூலம் வருமானத்தினை அதிகரித்து தன்னிறைவான மக்கள் சமூகத்தினை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் அமைப்பினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

10.1.1 **சேமிப்பு, கடன் திட்டம்** :- ஒவ்வொருவரது இயலுமைக்கும், ஆற்றலுக்கும் ஏற்ப சுயதொழில் கடன் வழங்குவதன் மூலம் வருமானத்தினை அதிகரிக்கும் நோக்கில் சேமிப்புக் கடன் திட்டப்பிரிவு செயற்பட்டுக்கொண்டு வருகின்றது. இதன் அடிப்படையில் ஆறு பிரதேசத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 2,430 அங்கத்தவர்களுக்கு இவ்வாண்டில் 61,074,000.00 ரூபாய் நிதி கடனாக வழங்கப்பட்டதுடன், இவ் வருட சேமிப்பாக 10,599,736.37 ரூபாய் அறவீடு செய்யப்பட்டுள்ளது. **(இணைப்பு - 02)**

10.1.2. **மரணாதாரத் திட்டம்** :- எமது அங்கத்துவக் குடும்பங்களில் அனேகமான மரணக்கிரியைகள் கடன் பெற்றே நடாத்தப்பட்டுக்கொண்டு வந்தன. முரணத்தில் கூட கடனாளியாகும் நிலையினை மாற்றி எமது அங்கத்தவர்கள் சுயகௌரவத்துடன் தமது மரணக்கிரிகையினை மேற்கொள்வதற்காகவே இத்திட்டம் அமைப்பினால் ஆரம்பிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகிறது. அரசாங்க உத்தியோகத்தரல்லாத அங்கத்தவர்களை மையமாகக் கொண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இத் திட்டத்தில் மாதாந்தம் 5.00 ரூபாய் வீதம் வருடத்திற்கு 60.00 ரூபாய் செலுத்தும் அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர். இவ்வுதவு தொகை அங்கத்துவக் குடும்பத்தில் முதல் மரணத்திற்கு 3000.00 ரூபாவும், இரண்டாம் மரணத்திற்கு 2000.00 ரூபாயுமாக 5000.00 ரூபாய் வழங்கப்படுகின்றது. **(இணைப்பு - 03)**

**10.1.3. வாழ்வாதாரத் திட்டம்** :-
நலிவுற்ற மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துமுகமாக வாழ்வாதார உதவித்திட்டத்தின் கீழ் ஆறு பிரதேசத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 2511 பயனாளிகளிக்கு ரூபா75,065,000.00 தொகை நிதியானது தொழில்களை மேற்கொள்வதற்காக கடனாக வழங்கப்பட்டுள்ளது.

**(இணைப்பு - 04)**








NCA நிறுவனத்தின் 90,000.00 ரூபாய் நிதி உதவியுடன் நாவிதன்வெளிப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 100 பயனாளிகளுக்கு 16kg மரக்கறி விதைகள் வழங்கப்பட்டுள்ளது.

CA நிறுவனத்தின் நிதி உதவியுடன் சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 4 விவசாயிகளுக்கு விதை நெல் உற்பத்திக்காக ஒருவருக்கு 30,000.00 வீதம் 4 பயனாளிகளுக்கும் 120,000.00 ரூபாய் நிதி உதவி வழங்கப்பட்டுள்ளதுடன், கல்முனை பிரதேச பாண்டிருப்பு கிளையில் 6 பேரைக் கொண்ட சுய உதவிக்குழு ஒன்றிற்கு நெசவுத் தொழில் செய்வதற்காக ரூபாய் 343,000.00 நிதி உதவியும் வழங்கப்பட்டுள்ளது.





வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சந்தைவாய்ப்பினை அதிகரிக்கும் நோக்கில் கல்முனைப் பிரதேசத்தின் சேனைக்குடியிருப்பு, பெரியநீலாவணை ஆகிய இரு கிராமங்களிலும் 400,000.00 ரூபாய் செலவில் CA நிறுவனத்தின் நிதி உதவியுடன் இரு சந்தைகள் கட்டிக்கொடுப்பதற்கான ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது

**10.1.4. தொழில் பயிற்சி வழங்கல்** :-

மேற்படிப்பினை தொடரமுடியாத நிலையில் பாதிக்கப்பட்ட வறுமை நிலையிலுள்ள இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சியினை வழங்குவதன் ஊடாக தொழில் வாய்ப்பிற்கான வழிகாட்டலை வழங்குவதை நோக்காக் கொண்டு உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் (WUSC) 639,430.00 ரூபாய் நிதி உதவியுடனும், ODW (Operational Days Work) நிறுவனத்தின் 7,398,300.00 ரூபாய் நிதி உதவியுடனும் தச்சுப்பயிற்சி, மின்வினைஞர், அழகுக்கலை, குளிரூட்டி திருத்துனர் பயிற்சிகளும் நடாத்தப்படுகின்றது. இத் தொழிற்பயிற்சிகளின் மூலம் 105 இளையோர்கள் பயன்பெறுகின்றார்கள். **(இணைப்பு - 05)**



அழகுக்கலைப் பயிற்சி



மின்வினைஞர் பயிற்சி



குளிரூட்டி திருத்துனர் பயிற்சி

**பயிற்சி பெற்ற பயிலுனர்களுக்கான தொழில் உபகரணங்களும், சான்றிதழும் வழங்குதல்.**

தாம் பெற்றுக்கொண்ட பயிற்சி நெறியின் மூலம் தொழில் செய்து வருமானத்தினை ஈட்டும் வகையில் ODW திட்டத்தின் கீழ் 2008ம் ஆண்டு திருக்கோவில் பிரதேசத்தில் நடாத்தப்பட்ட வீட்டு மின்னிணைப்பாளர் பயிற்சியினை முடித்த 17 பயிலுனர்களிற்கும், கல்முனை பிரதேசத்தில் வீட்டு மின் உபகரணம் திருத்துனர் பயிற்சியினை முடித்த 16 பயிலுனர்களிற்கும், 2009ம் ஆண்டு அழகுக்கலை பயிற்சியினை முடித்த 19 பயிலுனர்களுக்கும் 15.000.00 ரூபாய் பெறுமதியான (TOT) தொழில் உபகரணங்களும், பயிற்சியினை முறையாக பூர்தி செய்தமைக்கான சான்றிதழும் வழங்கப்பட்டுள்ளது.








**10.2. சமூக அபிவிருத்தி திட்டம்.**

**10.2.1. கல்வி அபிவிருத்தி செயற்பாடுகள்.:-**

கல்வி அபிவிருத்தி செயற்திட்ட நடைமுறைப்படுத்தலின் கீழ் கல்வி கற்க ஆர்வமுடைய வறிய மாணவர்களின் நலன் கருதி கா.பொ.த உயர்தர கலைப்பிரிவில் பரீட்சைக்கு தோற்றுகின்ற மாணவர்களுக்கான இந்து சமயம், அரசியல், தமிழ் ஆகிய மூன்று பாடத்திட்டங் களுக்குமான மீட்டல் வகுப்பானது 30.000.00 ரூபாய் செலவில் திருக்கோவில் பிரதேச தம்பிலுவில் மகாவித்தியாலயத்தில் நடாத்தப்பட்டது. இதில் தம்பிலுவில் மகாவித்தியாலயத்திலிருந்தும், வினாயகபுர மகாவித்தியாலயத்தில் இருந்தும் 625 மாணவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றுள்ளனர்.






**10.2.2 சிறுவர் அபிவிருத்தி** :- சிறுவர் நலன், சுயவிருப்பங்கள், உரிமைகள் ஆகியவற்றை சிறுவர்கள் இணைந்து செயற்படுத்துவதன் மூலம் சமூகத்தில் ஓர் முன்மாதிரியான திறன், ஆற்றலுள்ள எதிர்கால சந்ததியினை வளர்த்தெடுக்கும் நோக்கில் சிறுவர் அபிவிருத்திப் பிரிவு உருவாக்கப்பட்டு கீழ்வரும்செயற்பாடுகள் அமைப்பினால் செயற்படுத்தப்பட்டுக்கொண்டு வருகின்றது.

**பாலர் பாடசாலை நடாத்துதல்** :- அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களில் சுவாட் அமைப்பினால், Diakonia நிறுவனத்தின் நிதியுதவியுடன் 29 பாலர் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இப் பாலர் பாடசாலையில் 53 ஆசிரியர்கள் கற்பித்து வருவதுடன் 1070 சிறார்களும் கல்விகற்று வருகின்றார்கள். இப் பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவாக இவ்வருடம் 1,272,000.00 ரூபாய் நிதி வழங்கப்பட்டுள்ளது.

(இணைப்பு - 06)







**பாலர் பாடசாலையில் கற்பித்தல் செயற்பாடுகளாக கீழ் வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்படுகின்றன.**

- கதை கூறல்.
- படங்களை வெட்டி ஒட்டல்.
- சூழலிலுள்ள பொருட்களைக் கொண்டு செயற்பாடுகளை செய்து காட்டல்.
- அபிநயப் பாடல்கள்.
- சமய நிகழ்வுகளில் ஈடுபடுத்தல்.
- நிறம் தீட்டுதல்.
- கணித எண்ணக்கரு சம்பந்தமான குழுச் செயற்பாடுகள்
- மாதங்களைச் சொல்லுதல் (தமிழ். ஆங்கிலத்தில்)
- எழுத்துக்களை இனங்காணல்.
- பூக்கள் தெரிவு செய்தல்.
- களியால் உருவங்கள் அமைத்தல்.
- ஆக்கத்திறன் மூலம் தசை நார் பயிற்சியும் எழுதுவதற்கான முன்னாயத்தமும் ஏற்படுத்துதல்.
- சுவாச திறன் பயிற்சிகளை வழங்கல்.

**முன் பள்ளி மாணவர்களுக்கிடையே கலாச்சார நிகழ்வுகள், போட்டிகளை நடாத்தல்.**

கல்வி கற்றுவரும் சிறார்களின் திறன், ஆற்றல்களை வெளிக்கொண்டு வரும் வகையில் கல்முனைப் பிரதேசத்தில் செயற்பட்டு வரும் விவேகானந்தா, கணேசா, கலைமகள் ஆகிய பாலர் பாடசாலை மாணவர்களுக்கிடையே இப் பிரதேச நிர்வாக உத்தியோகத்தர் திருமதி.K.சந்திரமலர் அவர்களின் தலைமையில் 09.08.09ம் திகதி கல்முனை மணச்சேனை கிராம விவேகானந்தா பாடசாலையில் விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட்டு ஊக்குவிப்பு பரிசில்களும் வழங்கப்பட்டுள்ளது. இதில் பிரதம அதிதிகளாக கணேசா மகாவித்தியாலய அதிபர் திரு.P.ஜெகநாதன், K.சந்திரலிங்கம் அவர்களும், விவேகானந்தா பாடசாலை ஆசிரியை திருமதி.தபேசன் சிருமணி, அவர்களும் உதவிப்பணிப்பாளர் திருமதி.செல்வராஜா மகாலெட்சுமி அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.







**10.2.3 பெண்கள் அபிவிருத்தி செயற்பாடுகள் :-** சமூகத்தில் பெண்களுக்கான சுயவருமானத்தினை அதிகரித்து பால்நிலை வேறுபாடின்றி சம அந்தஸ்த்தினை வழங்குவதன் ஊடாக பெண்களின் தலைமைத்துவத்தையும், விழிப்புணர்வினையும் ஏற்படுத்தி சுயமாகத் தீர்மானங்களை எடுக்கும் நிலைக்கு பெண் சமூகத்தினை உயர்த்தும் நோக்கில் அமைப்பினால் கீழ்வரும் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**01. சுய சார்புக் குழுக்களை அமைத்தல்.**

ஒரே கிராமத்தில் வசிக்கும் ஒருமித்த கருத்துடைய 10 தொடக்கம் 20 வரையான வசதியற்ற ஏழைப்பெண்களை உறுப்பினர்களாகச் சேர்ந்து ஒருவருக்கொருவர் உதவி செய்யும் ஒற்றுமை மனப்பான்மையை உருவாக்கி செயற்படுத்துவதுடன், தங்களது குடும்ப முன்னேற்றத்திற்கும், கிராம ,சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குமாக தன்னார்வத்துடன் சுயமாக செயற்படும் முகமாக அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலும் உள்ள 58 கிராமக் கிளைகளிலுமிருந்து 8179 பேரை உள்ளிணைத்து 688 சுய சார்புக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.





## சுய சார்புக் குழு மேம்பாட்டிற்கான செயற்பாடுகள்

**சமூக மேம்பாடு**

1. மகளிர் மத்தியில் “நமக்கு நாமே” என்ற உணர்வினை ஏற்படுத்துதல்.
2. சாதி சமய வேறுபாடுகளை நீக்கி மகளிரிடையே நல்லிணக்கத்தை உருவாக்குதல்.
3. சமூகத்திலும், குடும்பத்திலும் முடிவெடுக்கும் பொறுப்பினை பகிர்ந்தளிக்கச் செய்தல்.
4. பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் கொடுமைகளை எதிர்த்தல்.
5. மகளிருக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துதல்.
6. சுகாதாரம், குடும்ப நலம் போன்றவற்றில் தெளிவினை உண்டாக்குதல்.
7. கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளில் ஈடுபடுதல்.
8. சமூக விழிப்புணர்வை உருவாக்குதல்.

**பொருளாதார மேம்பாடு**

1. அத்தியாவசிய, அவசர கடன் தேவைகளை சுயமாகப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறைகளை ஏற்படுத்தல்.
2. கடன் தேவைகளுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்போரை சார்ந்து இருப்பதை முழுமையாக தவிர்த்தல்.
3. சேமிப்பை அதிகரித்தல்.
4. ஓய்வு நேரங்களில் வருவாய் ஈட்டும் தொழிலில் ஈடுபடுதல்.
5. தொழில் திறன் பெற்று, குடும்ப பொருளாதார நிலையை உயர்த்துவதற்கான வழிவகை காணுதல்.

6. பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை பெற்று முன்னேறுவதற்கான திறனை வளர்த்தல்.
7. உற்பத்தி செய்த பொருட்களை இடைத்தரகர் இன்றி விற்பனை செய்யும் வகையில் விற்பனைத் திறனை வளர்த்தல்.

**திறன் வளர்த்தல்.**

1. பெண்களுக்கு

_ பேசும் திறன்

_ எழுதும் திறன்

_ வாசிக்கும் திறன் ஆகியவற்றை வளர்த்தல்.

2. நல்ல தலைமைப் பண்புகளை வளர்த்தல்.
3. முடிவெடுக்கும் திறனை மேம்படுத்தல்.
4. நடைமுறை வாழ்க்கைக் கல்வியை கற்றுக் கொடுத்தல்.
5. விடாமுயற்சி கொண்டு செயல்களை முடிக்கும் திறனை மேம்படுத்துதல்.
6. தன்னம்பிக்கையினை வளர்த்தல்.
7. பெண்களுக்கான சட்டங்கள், உரிமைகள் அறிந்து செயலாக்கத்தில் ஈடுபடச் செய்தல்.
8. தகவல் தொடர்புத் திறனை வளர்த்தல்.
9. பதிவேடுகள் பராமரிக்கும் திறனை வளர்த்தல்.
10. குழுவாக இணைந்து சாதனைகள் புரிந்திடும் ஆற்றலை வளர்த்தல்.
11. தொழில் திறன் பயிற்சி அளித்தல்.
12. கணினி, மின்னணு சாதனங்களைப் பயன்படுத்தும் திறமைகளை வளர்த்தல்.
13. திறன்களை வளர்த்துக் கொண்டு குடும்ப, கிராம, நகர்புற மேம்பாட்டிற்கு வழிவகை செய்தல்.
14. சமூக நீதிக்காக போராடும் திறனை உருவாக்கல்.

## 02. உறவுகளை கட்டியெழுப்புதல். :-

தமிழ், முஸ்லிம், சிங்களம் ஆகிய மூவின சமூகங்களுக்கிடையிலான சமாதான நல்லிணக்க உறவுகளை கட்டி எழுப்புவதையும், பெண்களுக்கு எதிரான வன்முறைகளைக் குறைப்பதையும் நோக்காகக் கொண்டு NCA நிறுவனத்தின் நிதி உதவியுடன் இம் மூவின மக்களையும் உள்ளிணைத்து பெண்கள் தலைமையில் 30 பேரைக்கொண்ட செயற்பாட்டுக் குழுக்களும், 30 பேரைக் கொண்ட நடவடிக்கைக் குழுக்களும் அமைக்கப்பட்டு இவர்களுக்கு தேவையான பயிற்சிகளும் வழங்கப்பட்டுள்ளது. மாதம் ஒரு தடவை இக் குழுக்கள் ஒன்றுகூடி கலந்துரையாடல்களை நடாத்தி வருகின்றனர். இக் கலந்துரையாடலின் போது அவர்களது கிராமங்களில் பெண்களுக்கு எதிராக ஏற்படுகின்ற பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்கக்கூடிய பிரச்சினைகளுக்கு குழுக்களாக ஒன்றிணைந்து தீர்வினைக்காண்கின்றனர்.

பெண்களின் வன்முறை தொடர்பான கருத்துக்களை வெளிப்படுத்தும் நோக்கில் துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளதோடு, விளம்பரப் பலகைகள் போடுவதற்கான ஒழுங்கு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம் மூவின மக்களிடையே சமாதான நல்லிணக்கத்தினை ஏற்படுத்தும் வகையில் நாவிதன்வெளிப் பிரதேச 4ம் கிராம வாணி மகா வித்தியாலயத்தில் 2009.12.26 திகதி மூவின மக்களையும் உள்ளிணைத்து கலாச்சார விளையாட்டு நிகழ்வுகள் நடாத்தப்பட்டது. இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக ………… ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

  

**10.2.4 விழிப்புணர்வு நடவடிக்கைகள். :-** விழிப்புணர்வு நடவடிக்கைகள் மூலம் மக்களை உணர்வூட்டி அவர்களை கல்வி, சுகாதார, பொருளாதார, சமூக ரீதியில் மேம்பாடு அடையச்செய்வதன் மூலம் தன்னிறைவான மக்கள் சமூகத்தை கட்டியெழுப்புவதை நோக்கமாகக் கொண்டு CA, NCA, ODW, ஆகிய நிறுவனங்களின் நிதி உதவியுடன் கீழ் வரும் விழிப்புணர்வு நடவடிக்கைகள் அமைப்பினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

01) சமூக வலுவூட்டாளர், பணியாளர் கொள்திறன் மேம்பாட்டில் கல்முனை, நாவிதன்வெளி, சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 18 பேருக்கு (Staff and Mobilizers) இருநாள் பயிற்சிகள் வளவாளர் திரு.ச.செந்துராசா அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளது.

01) சுய உதவிக்குழுக்களின் கடமைகள், பொறுப்புக்கள் தொடர்பாக கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 3 பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 150 குழு நிர்வாகிகளுக்கு 10 கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளது.

02) வீட்டுத்தோட்டம், நெற் செய்கையில் ஈடுபடும் 300 விவசாயிகளுக்கு இயற்கைமுறை விவசாயம் தொடர்பாக 10 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

03) கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய 3 பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 கிராமக் கிளைகளின் சுய உதவிக்குழு நிர்வாகிகள், திட்டப் பணியாளர்கள் 140 பேரை உள்ளிணைத்து குழுக்களின் சுய கண்காணிப்பு முறைமை தொடர்பாக 4 பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

05) அரச விவசாய திணைக்களத்தின் ஊடாக மக்களுக்கு வழங்கப்படும், சேவைகள், மானியங்கள் தொடர்பாக சுய உதவிக்குழு நிர்வாகிகள் 114 பேருக்கு விவசாய கண்காணிப்பு உத்தியோகத்தர் திரு.குணசீலன், மாவட்ட விவசாய பிரதிப்பணிப்பாளர் திரு. தயாரெட்ண அவர்களைக் கொண்டு 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

06) கணக்குவைப்பு முறை தொடர்பாக சுய உதவிக்குழு நிர்வாகிகள் 114 பேரை உள்ளிணைத்து 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

07) கல்முனை, நாவிதன்வெளி ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 10 கிராமக்கிளைகளின் 350 குழு நிர்வாகிகளுக்கு நிதி முகாமைத்துவம் தொடர்பாக 10 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

08) விதைநெல் உற்பத்தி தொடர்பாக விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர் திரு.குணசீலன் அவர்களினால் சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 180 விவசாயிகளை உள்ளிணைத்து 6 பயிற்சிகள் நடாத்தப்பட்டது.

09) அரச நிறுவனங்களினூடாக மக்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் பற்றி பிரதேச செயலாளர்கள் திரு. ஜெகநாதன், திரு.மன்சூர்,

திரு.கோபாலரத்னம் ஆகியோரைக் கொண்டு குழு நிர்வாகிகள் 114 பேருக்கு 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

**10)** வங்கிகளினுாடாக மக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் பற்றி HNB Manager-M.L. Anverdeen, Peoples Bank Manager- U.S.M.Mashood ஆகியோரைக் கொண்டு குழு நிர்வாகிகள் 114 பேருக்கு 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

**11)** வளங்களையும், சேவைகளையும் பெற்றுக்கொள்ளும் வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கானது நாவிதன் வெளிப் பிரதேச 4ம் கிராமத்தில் 30 பேரைக் கொண்ட செயற்பாட்டுக் குழுக்களுக்கு வளவாளர் திரு.பரமசிங்கம் அவர்களினால் நடாத்தப்பட்டது.

**12)** பெண்களின் உரிமை, தலைமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கானது நாவிதன் வெளிப் பிரதேச 12ம் கிராமத்தில் மூவின மக்களையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ள பெண்கள் செயற்பாட்டுக் குழுக்களுக்கு வளவாளர் திரு.பரமசிங்கம் அவர்களினால் நடாத்தப்பட்டது. இக்கருத்தரங்கில் 45பேர் கலந்து கொண்டனர்.

**13)** நாவிதன்வெளிப் பிரதேச 04ம், 12ம், விஜயபுர ஆகிய கிராமங்களின் முக்கிய பிரமுகர்கள், தலைவர்கள் 270 பேரை உள்ளிணைத்து பெண்களின் உரிமை பற்றி 09 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

**14)** வாழ்க்கைத் திறன் தொடர்பாக கல்முனை, ஆலையடிவேம்பு ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 53 தொழிற்பயிற்சி யாளர்களுக்கு 3 பயிற்சிகளும், 210 கிராம மக்களை உள்ளிணைத்து 6 கருத்தரங்குகளும் வளவாளர் ALM.றபீக் அவர்களாலினால் நடாத்தப்பட்டுள்ளது.

**15)** நாவிதன்வெளிப் பிரதேசத்திலுள்ள 210 கிராம மக்களை உள்ளிணைத்து பெண்களின் உரிமை, தலைமைத்துவம் தொடர்பாக 06 கருத்தரங்குகள் வளவாளர் ம.மாலதி அவர்களைக் கொண்டு நடாத்தப்பட்டுள்ளது.

**16)** சமாதான நல்லிணக்கம் தொடர்பாக நாவிதன்வெளிப் பிரதேசத்திலுள்ள 210 இளஞர், யுவதிகளை உள்ளிணைத்து வளவாளர் திரு.ராஜேந்திரன் அவர்களினால் 06 கருத்தரங்குகள் நடாத்தப்பட்டுள்ளது.

**17)** உறவுகளைக் கட்டியெழுப்புதல் என்ற தலைப்பில் நாவிதன்வெளிப் பிரதேசத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட 180 இளைஞர், யுவதிகளை உள்ளிணைத்து 06 கருத்தரங்குகளும், 180 கிராம மக்களை உள்ளிணைத்து ஒரு கருத்தரங்கும் வளவாளர் திரு.பரமசிங்கம் அவர்களினால் நடாத்தப்பட்டுள்ளது.

**18)** அனர்த்த அபாயக்குறைப்புக்கான வழிமுறைகள் தொடர்பாகவும், காலநிலை மாற்றம் தொடர்பாகவும் கிராம மக்கள் 55 பேரை உள்ளிணைத்து 3 கருத்தரங்குகளும், 30 பேரைக் கொண்ட இளையோர் குழுக்களை அமைத்து ஒரு கருத்தரங்கும் வளவாளர் திரு.பரமசிங்கம், திட்ட உத்தியோகத்தர் Y.சுகேந்திரராஜா ஆகியோரினால் நடாத்தப்பட்டுள்ளது.

**19)** தொழில் திறன் தொடர்பான பயிற்சியானது கல்முனை, ஆலையடிவேம்பு ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் தெரிவுசெய்யப்பட்ட 52 தொழிற்பயிற்சியாளர்களுக்கு வளவாளர் திருமதி. சிவகாமிதேவி அவர்களைக் கொண்டு 3 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

20) பால்நிலை அபிவிருத்தி தொடர்பாக வளவாளர். K.யேசுசகாயம் அவர்களினால் திருக்கோவில், கல்முனை, ஆலையடிவேம்பு ஆகிய மூன்று பிரதேசத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 69 தொழிற்பயிற்சி யாளர்களுக்கும் 4 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

21) தொழில் முன்னாயத்தம் தொடர்பாக வளவாளர். K.யேசுசகாயம் அவர்களினால் கல்முனை, ஆலையடிவேம்பு ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் 68 தொழிற்பயிற்சியாளர்களை உள்ளிணைத்து 4 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

22) தற்காப்பு முதலுதவி தொடர்பாக வளவாளர் ALM. Rafeek, M.I. Umar Ali ஆகியோரைக் கொண்டு கல்முனை, ஆலையடிவேம்பு ஆகிய இரு பிரதேசங்களிலிருந்தும் 69 தொழிற்பயிற்சியாளர்களை உள்ளிணைத்து 4 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளது.

23) குழுக்கள் வலுவூட்டல் தொடர்பாக அமைப்பின் செயற்பாட்டுப் பிரதேசங்களான 6 பிரதேசங்களிலுமுள்ள 688 குழுக்களுக்கும் மாதத்தில் இரண்டு பயிற்சிகள் குழுத் தலைவிகளினால் நடாத்தப்பட்டு வருகின்றது.

**10.3.சுற்றாடல் / சூழல் அபிவிருத்தி :-** சூழல் பாதிப்புக்களிலிருந்து எமது சமூகத்தினை பாதுகாத்து, ஆரோக்கியமான வாழ்வுக்கு உகந்த சூழலை உருவாக்குதலை நோக்கமாகக் கொண்டு கீழ் வரும் செயற்பாடுகள் அமைப்பினால் செயற்படுத்தப் பட்டுள்ளது.

**10.3.1. குடிநீரும் சுகாதாரமும் :-** சுகாதார நலன் பேணும் நோக்கில் நாவிதன்வெளிப் பிரதேசத்தின் விஜயபுர கிராம செயலாளர் பிரிவிற்குட்பட்ட சிலம்பலாவேவ மகாவித்தியாலயம், ஹேகல மகாவித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளிலும் 319,600.00 ரூபாய் செலவில் இரு அறைகளைக் கொண்ட 4 மலசலகூடங்கள் சுவட் அமைப்பினால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.




**10.3.2. இயற்கைமுறை விவசாயம். :-** CA நிறுவனத்தின் நிதி உதவியுடன் வீட்டுத்தோட்டம், நெற் செய்கையில் ஈடுபடும் 300 விவசாயிகளுக்கு இயற்கைமுறை விவசாயம் தொடர்பாக 95,000.00 ரூபாய் செலவில் 10 பயிற்சிகள் நடாத்தப்பட்டுள்ளதுடன், கல்முனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 4 பயனாளிகளுக்கு 160,000.00 ரூபாய் செலவில் தொழிநுட்ப உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளது.




### 10.3.3. அனர்த்த அபாயத்தணிப்பு செயற்திட்டம்.

**- அனகியடுப்பு வழங்கல். :-** அனர்த்த அபாயத்தணிப்பு செயற்திட்டத்தின் கீழ் பொத்துவில், திருக்கோவில், காரைதீவு, சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி அகிய 6 பிரதேசங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 450 பயனாளிகளுக்கு 152,000.00 ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 450அனகியடுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அக்கிராம மக்களின் குடும்ப சுகாதாரம் பேணப்பட்டுள்ளதோடு பணச் செலவுகள், சக்தி, நேரம் வீண்விரயம், விறகு பாவனைகள் குறைக்கப்பட்டுள்ளதோடு, தீ ஆபத்துக்களும் தணிக்கப்பட்டுள்ளது.






**- மரம் நடல்:-** CA , NCA ஆகிய நிறுவனங்களின் 420,000.00 ரூபாய் நிதி உதவியுடன் பொத்துவில், திருக்கோவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி ஆகிய நான்கு பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 27 கிராமக்கிளைகளின் 1500 பயனாளிகளுக்கு மா, பலா, தென்னை, கொய்யா ஆகிய மரக்கன்றுகள் உள்ளடங்களாக ஒரு பயனாளிக்கு 3 கன்றுகள் வீதம் 4500 பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மரம் நடுதல்முறை பற்றியும் அதில் ஏற்படுகின்ற நோய்கள் பற்றியும் தெளிவுபடுத்தப்பட்டது. தற்போது இப்பயனாளிகள் உரிய முறையில் மரங்களை நட்டு பராமரித்து வருகின்றனர்.






## 11. நிதி வழங்கிய நிறுவனங்கள். (2009)

- LWR - 501,000.00
- NCA - 1,644,735.88
- CA - 657,716.00 (CA-DRR)
  - 9,892,535.40 (Appeal fund)
- ODW - 6,504,175.00
- NECCDEP - 6,865,863.09
- NECCDEP (2) - 555.500.00
- Diakonia - 2,734,154.34
- WUSC - 517,532.00
- EU – Oxfam
  - Oxfam SLRC58- AUF - 5,518,724.50
  - Oxfam SLRC59- AUF - 508,565.50
  - EUACAP ISEM - 3,254,480.00
  - EUACAP ISEP - 14,475,535.50
- SOND - 330,000.00 (Pre school teachers salary)
- Well Wishers - 498,464.50

**மொத்தம் - 54,458,981.71**

## 12. இவ் வருடம் எமது அமைப்பிற்கு வருகைதந்த பிற நிறுவனங்கள்.

| இல | திகதி | நிறுவனம் | நிறுவன பிரதிநிதி | வருகையின் நோக்கம் | நிறுவனம் சார்பாக கலந்துகொண்டோர் |
|---|---|---|---|---|---|
| 1 | 24.02.2009 | Neccdep | Project management specialist | திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | சமூக வலூவூட்டாளர்கள். |
| | | | | | |
| 2 | 05.03.2009 | UNICEF | Program Assistant | சிறுவர் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை விளம்பரப்பலகையிடல் தொடர்பாக கலந்துரையாடல். | நிருவாகப் பணிப்பாளர் |
| | | | | | |
| 3 | 23.06.2009 | LWR | Program manager | விவசாய உற்பத்தி பெறுமதி மேம்பாட்டு ஆய்வு தொடர்பான கலந்துரையாடல் | நிருவாகப்பணிப்பாளர், நிகழ்சித் திட்ட முகாமையாளர் |
| | | | | | |
| 4 | 08.08.2009 | LWR | Programme officer | LWR திட்டம் தொடர்பாகவும், ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பானதுமான கலந்துரையாடல் நடாத்தல் | நிருவாகப்பணிப்பாளர், இணைப்பாளர், திட்ட உ/தி மற்றும் கள உத்தியோகத்தர்கள் |
| | | | | | |
| 5 | 17.08.2009 | WUSC | Capacity Building Officer | நிதித் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | நிருவாகப்பணிப்பாளர் |
| | | | | | |
| 6 | 27.08.2009 | EMDH | Asia Representative | எமது அமைப்பு பற்றி அறிதலும், எமது நிறுவனத்தினால் முன்னெடுககப்படுகின்ற சிறுவர் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் பற்றிய தகவல்களை பெற்றுக்கொள்ளுவதற்கும். | நிருவாகப்பணிப்பாளர் |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7 | 24.09.2009 | WUSC | Gender Equality Manager | Wusc திட்டம் தொடர்பாகவும், அவைகுறித்த ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பானதுமான கலந்துரையாடல் | நிருவாகப்பணிப்பாளர், இணைப்பாளர், Wusc திட்ட உத்தியோகத்தர் |
| | | | | | |
| 8 | 30.09.2009 | Oxfam | P.M,PC & other staff | Oxfam திட்டம் தொடர்பாகவும், அவைகுறித்த ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பானதுமான கலந்துரையாடல் | நிருவாகப்பணிப்பாளர், நிகழ்சித்திட்ட முகாமையாளர் |
| | | | | | |
| 9 | 16.10.2009 | Oxfam | PO. F.O | திட்டத்திற்கான பணியாளார் நேர்முகத் தேர்விற்கு | நிருவாகப்பணிப்பாளர |
| | | | | | |
| 10 | 12.10.2009 | FAO, Forest Dep | Programme Officer | கரையோர மரநடுகைத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் | நிருவாகப்பணிப்பாளர், நிகழ்சித்திட்ட முகாமையாளர் |
| 11 | 20.10.2009 | CA, FCA | Project Officer | கல்முனை, நாவிதன்வெளி ஆகிய இரு பிரதேசங்களுக்கான களவிஜயம் | கள உத்தியோகத்தர், திட்ட உத்தியோகத்தர், நிருவாகப்பணிப்பாளர், |
| | | | | | |
| 12 | 12.11.2009 | WUSC | Programme Assistant, Project coodintor | பொத்துவில் பிரதேசத்தில் ஆரம்பமாக உள்ள Carpentry Course தொடர்பாக கலந்துரையாடல் நடாத்தலும், ஒப்பந்தத்தில் கையொப்பமிடலும். | நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் Wusc திட்ட உத்தியோகத்தர் |
| | | | | | |
| 13 | 27.11.2009 | WDC (vavunia) | 11 Staffs | எமது நிர்வாகம், கணக்குவைப்பு மற்றும் திட்டம் தொடர்பான முறைமைகளை பார்வையிடல். | பணிப்பாளர்கள் |
| | | | | | |
| 14 | | | | | |
| | | | | | |
| | | | | | |

## 13. பணியாளர்கள் பெற்றுக் கொண்ட பயிற்சிகள்.

| இல | பயிற்சி நடைபெற்ற நாட்கள் | | பயிற்சி நடைபெற்ற இடம் | பயிற்சித் தலைப்பு | பயிற்சியில் பங்கு பற்றிய பணியாளர்களின் பெயர் | வகிக்கும் பதவி | பயிற்சி ஒழுங்கு செய்த நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ஆரம்ப திகதி | முடிவுத் திகதி | | | | | |
| 1 | 18.08.2009 | 20.08.2009 | மட்டக்களப்பு | முரண்பாட்டுத்தீர்வு | S.Anantharasa | C.B.O | Diakonia |
| 2 | 24.08.2009 | 27.08.2009 | மட்டக்களப்பு | மனிதாபிமான பணிகளுக்கான பொறுப்புணர்வு நடவடிக்கை. | S.Mathiyarasan | F.C | Lutharan World Relief |
| | | | | | K.Jeyakumar | F.C | |
| | | | | | S.Jeyaroopan | F.C | |
| 3 | 13.10.2009 | 15.10.2009 | தம்பட்டை பயிற்சி நிலையம் | சமூகபொறுப்புக்கூறல் | T.Ramesh | A.S.O | Consortium |
| | | | | | Sukirthini.G | P.O | |
| | | | | | S.Anantharaja | P.O | |
| 4 | 28.10.2009 | 29.10.2009 | மட்டக்களப்பு ஒக்ஸ்பாம் நிறுவன காரியாலயம் | திட்ட நடைமுறைப் படுத்தல் | V.Paramasingam | A.D | Oxfam |
| | | | | | K.Premalathan | P.M | |
| | | | | | S.Anandaraja | P.O | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | Rathanika.V | F.A | |
| | | | | | N.Babu | L.O | |
| 5 | 30.11.2009 | 04.12.2009 | ஒறுத்தோட்ட,கண்டி | முரண்பாடற்ற சூழல் | J.Ranjith | P.O | ODW |
| 6 | 02.12.2009 | 05.12.2009 | சத்துருக்கொண்டான் சர்வோதயா பயிற்சி நிலையம் | சிவில் சமூக பங்கேற்பு மற்றும் சமூக அணிதிரட்டல் | S.P.Moorthy | D.M.O | Consortium |
| | | | | | T.Vanitha | V.D.O | |
| 7 | 21.12.2009 | 21.12.2009 | சுவாட் பற்சி மண்டபம் அக்கரைப்பற்று | மனித உரிமைகளும், விழுமியங்களும். | Y.Sugnthraraj | P.O | Consortium |
| 8 | 22.12.2009 | 22.12.2009 | சுவாட் பிற்சி மண்டபம் அக்கரைப்பற்று | HIV AIDS | R.Sarojini | V.D.O | Consortium |
| | | | | | M.Rathidevi | V.D.O | |
| 9 | 27.12.2009 | 30.12.2009 | திலங்கா உணவு விடுதி, கண்டி | சிவில் சமூக பங்கேற்பு மற்றும் சமூக அணிதிரட்டல் | S.P.Moorthy | D.M.O | Consortium |
| | | | | | T.Vanitha | V.D.O | |

## 14. நடைபெற்ற நிகழ்வுகள்.

**01. புதுவருட நிகழ்வு :-** 2009ம் ஆண்டின் புதுவருட நிகழ்வானது சுவாட் தம்பட்டை பயிற்சி நிலையத்தில் ஸ்தாபகர் திரு.சன்முகம் செந்துராசா அவர்களின் தலைமையில் 2009.01.05ம் திகதி நடாத்தப்பட்டது. இதில் பிரதம அதிதிகளாக …………, கலந்து சிறப்பித்தனர்.





**02. நெற்களஞ்சியசாலை நெற் சுத்திகரிப்பு நிலைய திறப்பு விழா :-** Oxfam நிறுவனத்தின் நிதி உதவியுடன் தம்பட்டை கிராமத்தில் அமைக்கப்பட்ட இந் நெற்களஞ்சிய சாலையானது 2009.01.20ம் திகதி அம்பாறை மாவட்ட அரச அதிபர் திரு சுனில் கன்னங்கரா அவர்கள் தலைமையில் திறந்துவைக்கப்பட்டது.





03. **சர்வதேச மகளீர் தினம் :-** இச் சர்வதேச மகளீர்தின நிகழ்வானது நாவிதன்வெளிப் பிரதேச ராணமடு மகாவித்தியாலயத்தில் 2009.03.29ம் திகதி நிர்வாகப்பணிப்பாளர் திரு.வ.பரமசிங்கம் அவர்களின் தலைமையில் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் பிரதம அதிதிகளாக பிரதேச தவிசாளர் திரு. T.கலையரசன் அவர்களும், 12ம் கிராம பாடசாலை அதிபர் திரு. A.M யுசிப் அவர்களும், RDS k.அமுர்தலிங்கம் அவர்களும், சமாதான நீதவான் A.ஆறுமுகம் அவர்களும் கலந்து சிறப்பித்தனர். இந் நிகழ்வின்போது சமூகத்தில் முன்னோடிப் பெண்கள் கௌரவிக்கப்பட்டனர்.






## இணைப்பு – 01

### பிரதேச, கிளை ரீதியான அங்கத்தவர் விபரம். (2009)

| No | DIVISION | BRANCH | Total Members | No | DIVISION | BRANCH | Total Members |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **Pottuvil** | Komary-01 | 164 | 32 | **Kalmunai** | Kalmunai -01 | 144 |
| 2 | | Koamary-02 | 134 | 33 | | Kalmunai - 02 | 143 |
| 3 | | Vaddively | 126 | 34 | | Pandiruppu | 195 |
| 4 | | Ullai | 42 | 35 | | Natpitimunai 01 | 183 |
| 5 | | Hithayapuram | 83 | 36 | | Natpitimunai 02 | 128 |
| 6 | | Urani | 75 | 37 | | Chenaikudieruppu -01 | 188 |
| 7 | | Kundumau | 153 | 38 | | Chenaikudieruppu -02 | 218 |
| 8 | | Ins.Eatham | 161 | 39 | | Periyaneelavanai | 186 |
| 9 | | R.M.Nagar | 107 | 40 | | Thuravanthiyameu | 48 |
| | | | **1045** | | | | **1433** |
| 10 | **Thirukkovil** | Thambiluvil-01 | 137 | | | | |
| 11 | | Thambiluvil-02 | 113 | 41 | **Sammanthurai** | Mad-Thravai | 118 |
| 12 | | Thambiluvil-03 | 168 | 42 | | Valathapity | 201 |
| 13 | | Thampaddai | 177 | 43 | | Sorikkalmunai | 184 |
| 14 | | Vinayagapuram-02 | 150 | 44 | | Veeramunai | 198 |
| 15 | | Vinayagapuram-03 | 144 | 45 | | Malwattai -01 | 123 |
| 16 | | Thandiyadi -01 | 104 | 46 | | Malwattai -02 | 125 |
| 17 | | Thandiyadi -02 | 100 | | | | **949** |
| 18 | | Kanchikudiyaru | 106 | | | | |
| 19 | | Thirukkovil-01 | 124 | 47 | **Navithanvely** | Navithanvely | 149 |
| 20 | | Gayathirikiramam -01 | 110 | 48 | | Veepaiyadi | 130 |
| 21 | | Thangavelayuthapuram | 104 | 49 | | 11th colony -01 | 147 |
| 22 | | Sagamam | 78 | 50 | | 11th colony -02 | 126 |
| 23 | | Thirukkovil-02 | 146 | 51 | | 11th colony -03 | 115 |
| 24 | | Munayoor | 125 | 52 | | 4th colony | 172 |

| | | | |
|---|---|---|---|
| 25 | | Vinayagapuram-04 | 189 |
| 26 | | Gayathirikiramam-02 | 115 |
| | | | **2190** |
| 27 | **Karaitivu** | Karaithivu-01 | 115 |
| 28 | | Karaithivu-02 | 171 |
| 29 | | Karaithivu-03 | 132 |
| 30 | | Karaithivu-04 | 157 |
| 31 | | Karaithivu-05 | 202 |
| | | | **777** |

| | | | |
|---|---|---|---|
| 53 | | 12th colony | 69 |
| 54 | | 13th colony | 130 |
| 55 | | 15th colony | 142 |
| 56 | | Savalakkadai | 84 |
| 57 | | Siyambalaweva | 139 |
| | | | **1403** |
| | | **Total** | **7797** |

## இணைப்பு – 02

## பிரதேசரீதியான கடன், சேமிப்பு விபரங்கள். (2009 January to December)

| பிரதேசம் | வழங்கப்பட்ட கடன் | அறவீடு செய்யப்பட்ட சேமிப்பு |
|---|---|---|
| பொத்துவில் | 4,390,000.00 | 881,700.19 |
| திருக்கோவில் | 14,791,000.00 | 3,008,548.57 |
| காரைதீவு | 4,563,000.00 | 1,064,367.56 |
| கல்முனை | 11,614,000.00 | 2,147,506.74 |
| சம்மாந்துறை | 7,226,000.00 | 1,279,313.34 |
| நாவிதன்வெளி | 15,400,000.00 | 1,797,823.97 |
| ஆலையடிவேம்பு | 3,090,000.00 | 420,476.00 |
| **மொத்தம்** | **61,074,000.00** | **10,599,736.37** |

## இணைப்பு – 03

## பிரதேசரீதியான மரணாதார விபரங்கள். (2009 January to December)

| பிரதேசம் | அறவிடப்பட்ட மரணதாரம் | வழங்கப்பட்ட மரணாதாரம். |
|---|---|---|
| பொத்துவில் | 18,689.00 | 30,000.00 |
| திருக்கோவில் | 46,788.00 | 80,000.00 |
| காரைதீவு | 21,380.00 | 34,000.00 |
| கல்முனை | 14818.00 | 48000.00 |
| சம்மாந்துறை | 12,930.00 | 62,000.00 |
| நாவிதன்வெளி | 54,085.00 | 75,000.00 |
| ஆலையடிவேம்பு | 0.00 | 0.00 |
| **மொத்தம்.** | **168,690.00** | **329,000.00** |

**இணைப்பு – 04**

# தொழில் ரீதியாக வழங்கப்பட்ட கடன் விபரங்கள். (2009 January to December)

| தொழில் | பயனாளிகளின் எண்ணிக்கை. | வழங்கப்பட்ட கடன். |
|---|---|---|
| விவசாயம் | 1123 | 36,624,000 |
| வியாபாரம் | 295 | 9,887,000 |
| சிறு வியாபாரம் | 175 | 3,325,000 |
| வீட்டுத்தோட்டம் | 157 | 3,486,000 |
| தையல் | 62 | 1,479,000 |
| நெல் குற்றல் | 165 | 4,467,000 |
| மீன்பிடி | 47 | 1,782,000 |
| தச்சுத்தொழில் | 26 | 1,013,000 |
| கோழிவளர்ப்பு | 284 | 6,492,000 |
| மாடு வளர்ப்பு | 68 | 2,365,000 |
| ஆடு வளர்ப்பு | 32 | 755,000 |
| வீடுதிருத்தம். | 54 | 2,385,000 |
| கல் வெட்டுதல் | 23 | 1,005,000 |
| **மொத்தம்.** | **2511** | **75,065,000** |

**இணைப்பு – 05**

# தொழில் பயிற்சிநெறி பற்றிய விபரங்கள் - 2009.

| இல | தொழில் பயிற்சி விபரம் | பிரதேசம் | பயிலுனர் எண்ணிக்கை விபரம். | | | நிதி நிறுவனம் |
|---|---|---|---|---|---|---|
| | | | ஆண் | பெண் | மொத்தம் | |
| 1 | தச்சுப் பயிற்சி நெறி. | பொத்துவில் | 8 | 17 | 25 | WUSC |
| | | திருக்கோவில் | 20 | 0 | 20 | ODW |
| 2 | மின்வினைஞர் பயிற்சி. | கல்முனை | 20 | 0 | 20 | |
| 3 | குளிரூட்டி திருத்துனர் பயிற்சி. | ஆலையடிவேம்பு | 20 | 0 | 20 | |
| 4 | அழகுக்கலைப் பயிற்சி | கல்முனை | 0 | 20 | 20 | |
| | | | **68** | **37** | **105** | |

இணைப்பு – 06

## பாலர் பாடசாலை பற்றிய விபரங்கள் - 2009.

| இல | பிரதேசம் | பாடசாலைகளின் எண்ணிக்கை. | மாணவர்களின் எண்ணிக்கை. | ஆசிரியர்களின் எண்ணிக்கை. |
|---|---|---|---|---|
| 1 | பொத்துவில் | 3 | 116 | 6 |
| 2 | திருக்கோவில் | 10 | 379 | 17 |
| 3 | காரைதீவு | 2 | 69 | 3 |
| 4 | கல்முனை | 3 | 130 | 6 |
| 5 | சம்மாந்துறை | 3 | 102 | 5 |
| 6 | நாவிதன்வெளி | 8 | 274 | 16 |
| | மொத்தம் | 29 | 1070 | 53 |

## சுய உதவிக் குழுக்களினால் செயற்படுத்தப்பட்டு வரும் செயற்பாடுகள்.

வீட்டுத் தோட்டம் அமைத்தல்.



பெட்டி இலைத்தல்.



தேங்காயெண்ணை ஊற்றி விற்பனை செய்தல்



கிடுகிலைத்தல்.



உற்பத்திப் பொருட்களை குழுக்களுக்கிடையே விற்பனை செய்தல்.



மா பைக்கட் பண்ணி விற்பனை செய்தல்.



உற்பத்தி பொருட்களை பண்டமாற்று முறையில் விற்பனை செய்தல்.





சிற்றுண்டிகள் தயாரித்து விற்பனை செய்தல்.



இயற்கைமுறையில் கிருமி நாசினிகளை தயாரித்தல்.





சிரமதானங்களை மேற்கொள்ளல்.





**Very good , Talk to me about the publication**